# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலமாக:

## இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு.P. ரங்கநாதன், B.E., M.Tech (IITD), AITP.,**

ந.க. எண்: 1480/2020/வேம3 நாள்.20.07.2020

பொருள் : குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடம் – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் – வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம்/ஊராட்சி ஒன்றியம், பத்தலபள்ளி ஊராட்சி / கிராமம், சர்வே எண். 241/2–ல் **2.06.50** ஹெக்டேர் பரப்பு கொண்ட மனையிடத்தில் மனை அனுமதியுடன் தரை தளம் + மூன்று தளங்களுடன் கூடிய 7 பிளாக்குகள் கொண்ட 304 குடியிருப்பு கட்டிடங்களுக்கு தொழில்நுட்ப இசைவு அளித்தல் – குறித்து.

பார்வை :

1. நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் அவர்களின் கடித எண். 368 / AE(P) / Vellore, DN/2019, நாள். 05.06.2020.
2. நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.368/உ.பொ(தி)/வே.கோ/2019, நாள்.03.07.2020.
3. Online விண்ணப்பம் எண். 202005202023979, நாள். 10.07.2020, e-DCR Scrutiny Report : 187572, நாள். 11.06.2020.
4. அரசாணை நிலை எண்.**138,** வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சி துறை (யுடி 4–1), நாள்.4.6.2004.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/09/பிஏ1, நாள். 04.04.2012.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் கடிதம் ந.க.எண். 14277/2017/சிபி1, நாள்.14.02.2017.
7. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க..பி2/22080/2019, நாள்.11.11.2019.
8. கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, வேலூர் அவர்களின் கடிதம் க.எண்.721/2019/உ.பொ, நாள்.07.08.2019.
9. அரசாணை (நிலை) எண்: **18,** நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: **04.02.2019.**
10. அரசாணை (நிலை) எண்.**16,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். **4367/2019/பிஏ2,** நாள். **06.11.2019** (ம) **05.02.2020.**
12. நன்னிலை வரி கட்டணம் கோரப்பட்ட நாள். 14.07.2020.
13. நன்னிலை வரி கட்டணம் செலுத்தப்பட்டு பெறப்பட்ட நாள். 20.07.2020.



SUPERINTENDING ENGINEER
Chennai Circle-I
Tamil Nadu Slum Clearance Board
Kamarajar Salai, Chennai

14. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 14.07.2020.
15. நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 368/உ.பொ(தி)/வே.கோ/2019, நாள்.17.07.2020.
16. நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 368/உ.பொ(தி)/வே.கோ/2019, நாள்.20.07.2020.

ooooooooo

உத்தரவு:

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம்/ஊராட்சி ஒன்றியம், பத்தலபள்ளி ஊராட்சி / கிராமம், சர்வே எண். 241/2–ல் **2.06.50** ஹெக்டேர் பரப்பு கொண்ட மனையிடத்தில் **11344.84** ச.மீ **FSI** பரப்பளவில் தரை தளம் + முன்று தளங்களுடன் கூடிய **7** பிளாக்குகள் கொண்ட **304** குடிசைமாற்று வாரிய குடியிருப்பு கட்டிட மனையிடத்திற்கு **" 1 - 7 "** வரை என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும்

மனையிடப் பரப்பு (வரைபடத்தின் படி) : **20669.30** ச.மீ

**குடியிருப்புகள் விவரம் :**

| Block Name | Ground Floor in Sq.m. | First Floor in Sq.m. | Second Floor in Sq.m. | Third Floor in Sq.m. | Total FSI Area in Sq.m. | No. of Dwelling Units |
|---|---|---|---|---|---|---|
| BLOCK - 1 | 602.12 | 602.12 | 602.12 | 602.12 | 2408.48 | 64 |
| BLOCK - 2 | 297.96 | 297.96 | 297.96 | 297.96 | 1191.84 | 32 |
| BLOCK - 3 | 297.96 | 297.96 | 297.96 | 297.96 | 1191.84 | 32 |
| BLOCK - 4 | 297.96 | 297.96 | 297.96 | 297.96 | 1191.84 | 32 |
| BLOCK - 5 | 440.13 | 440.13 | 440.13 | 440.13 | 1760.52 | 48 |
| BLOCK - 6 | 297.96 | 297.96 | 297.96 | 297.96 | 1191.84 | 32 |
| BLOCK - 7 | 602.12 | 602.12 | 602.12 | 602.12 | 2408.48 | 64 |
| **TOTAL** | | | | | **11344.84** | **304** |

**OSR** பரப்பு : **2072.00** ச.மீ

மேலும், மனுதாரரின் உத்தேசம் தொடர்பாக அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பார்வை 4–ல் காணும் அரசாணையின் படி பார்வை 12–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து மனுதாரரால் பார்வை 13–ல் கண்ட கடிதத்தில் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் பெறப்பட்டுள்ளது.

பார்வை 14–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் **2072.00** ச.மீ பரப்பளவு இடம் மற்றும் **OSR**-க்கு செல்லக்கூடிய அணுகு பாதையினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதினை தொடந்து பார்வை 16–ல் கண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வேலூர் கோட்டம் நிர்வாகப்பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.368/உ.பொ(தி)/வே.கோ/2019, நாள்.20.07.2020-ல் **OSR** பரப்பு – **2072.00** ச.மீ மற்றும் **OSR**-க்கு



SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board

செல்லக்கூடிய பாதையினை உள்ளாட்சியிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என உறுதிமொழி பெறப்பட்டுள்ளதினை தொடர்ந்து மனையிடத்திற்கு மனைஒப்புதலும், மேற்படி குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் **க. வ. / மா. ந. ஊ. அ. (வே.மா.) எண்: 17 அ, ஆ, இ, ஈ / 2020** என எண்ணிடப்பட்டு கட்டிட அனுமதிக்கான தொழில்நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. வரைபடத்தில் எல்லையிடப்பட்ட **A B C D** என எல்லையிட்ட **2072.00** ச.மீ பரப்பளவு **OSR** பகுதி மற்றும் அணுகு பாதையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு திறவிடமாகவே நிலைநிறுத்தப்பட வேண்டும். மேலும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு அதனை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3. Planning Permission is used in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the Local Bodies Act However Planning permissions is used subject to the condition that the applicant/ developer and also the Architects/ Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

4. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the Water Act 1974 for Discharge of Sewage.

5. "நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மூலம் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள

True Copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
Kamarajar Salai, Chennai-

நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. The provisions in the G.O. (Ms) No. 17, Housing and Urban Development (UD4(3)) Department dated: 05.02.2016 relating to installation and use of Solar Energy System should be followed.

8. பார்வை 5-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி "The Tamil Nadu Government in G.O.Ms.No. 112, Housing & Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act 2016, The Promoter has to advertise, Market, Book, Sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority".

9. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் புலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. உத்தேச குடியிருப்பு கட்டிடத்திற்கு Solar Water System அமைக்கப்பட வேண்டும்.
2. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.02-ன் படி உத்தேச கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
3. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் (ம) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் இதர தேவைக்கான நீர் வசதிகள் மனுதாரரின் சொந்த செலவில் செய்துகொள்ள வேண்டும்.
4. உத்தேச கட்டிடத்தில் அமையும் குடிநீர் மேல்நிலை தொட்டி (ம) மனையில் அமையும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
5. உத்தேச கட்டிடத்தில் விதிகளின்படி தேவையான தீ தடுப்பு (ம) தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.
6. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.3.11.04ன்படி செப்டிக் டேங்கில் 'U' trap அமைத்தல் வேண்டும்.
7. சுற்றுப்புற சூழல் (ம) வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash Brick Material பயன்படுத்தப்பட வேண்டும்.



SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
Kamarajar Salai, Chennai-5

8. Clause 2A of Fly Ash Notifications 2009 "Building Construction Agencies both in public and private shall prescribe the use of fly ash and fly ash products in their respective tender documents, Schedules of specifications and construction applications including appropriate standards and codes of practice and make provisions for the use of Fly Ash and Fly Ash based bricks, blocks or tiles or aggregate of them in the schedule of approved materials and rates".
9. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ( உண்மை நகல் ) கட்டுமானம் நடைபெறும்போது உத்தேச இடத்தில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.
10. தற்போது கட்டிட இசைவு வழங்கப்படும் வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது, அவ்வாறு மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருப்பின் இத்துறையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.
11. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன வசதிக்கான நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
12. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள், அதன்படியே நிலை நிறுத்தப்படல் வேண்டும்.
13. உத்தேச கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

மேற்காண் நிபந்தனைகளுடன் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடத்திற்கான தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள்–2 முத்திரையிடப்பட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

எனவே, **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பத்தலபள்ளி ஊராட்சி / கிராமம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்** அவர்கள் மேற்காணும் கட்டிட அனுமதிக்கான இறுதி உத்திரவினை மனுதாரருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்திரவினை **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பத்தலபள்ளி ஊராட்சி / கிராமம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்** அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும், குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிட அனுமதிக்கான தொழில்நுட்ப இசைவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

True copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-[illegible]

**இணைப்பு** –
இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர் :
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ,
பத்தலபள்ளி ஊராட்சி,
பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்,
பேர்ணாம்பட்டு வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

1. நிர்வாகப்பொறியாளர் ,
தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் ,
வேலூர் கோட்டம் ,
காட்பாடி வட்டம்,
வேலூர் – **632006.**

2. Tamil Nadu Real Estate Regulatory Authority
(TNRERA), 1st Floor,
No. 1A, Gandhi – Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

True copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5 Kamarajar Salai Chennai-600 005

ந.க.ஆ2/1333/2020

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்,
நாள்:27.07.2020.

<u>கடித குறிப்பு</u>

பொருள்: நீல வரைபடம் - வேலூர் மாவட்டம் - பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம் - பத்தலபல்லி ஊராாட்சி - பத்தலபல்லி கிராம சர்வே எண்.241/2-ல் 2.06.50ஹெக்டர் பரப்பில் தரை தளம் + மூன்று தளங்கள் 07 பிளாக்குகள் கொண்ட மொத்தம் 304 குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அமைய உள்ள கட்டுமானத்திற்கு - நீல வரைப்பட அனுமதிக்கான ஊராட்சி வளாச்சி கட்டணத் தொகை செலுத்த தெரிவித்தல் - சார்பு.

பார்வை: 1)நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்-1 அவர்களின் கடிதம் ந.க.எண்.1480/2020/வே.ம.3 நாள்:20.07.2020.
2) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், வேலூர் கோட்டம் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட திட்ட மதிப்பீடு.

**************

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பத்தலபல்லி ஊராட்சி, பத்தலபல்லி கிராம சர்வே எண்.241/2-ல் 2.06.50ஹெக்டர் பரப்பில் உள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 07 பிளாக்குகளில் தரை தளம் + மூன்று தளங்களுடன் மொத்தம் 304 வீடுகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைப்படத்திற்கு நீல வரைப்பட அனுமதி வழங்கும் பொருட்டு, ஊராட்சி வளாச்சி கட்டணங்கள் கீழகண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ.எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கட்டிட பரப்பளவு (11,344.84ச.மீ x ரூ.50/-) | 5,67,242- |
| 2. | ஆய்வுக் கட்டணம் | 6,500- |
| 3. | நகல் கட்டணம் (3x100) | 300- |
| | **மொத்தம்** | 5,74,042- |

| வ.எண் | திட்ட மதிப்பீடு ரூ. | LWF தொகை 1% ரூ. |
|---|---|---|
| 1. | ரூ.24,02,78,000- | 24,02,780- |

True copy

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar, Salai, Chennai-600 005

[illegible]

எண் . 1-ல் " Village Panchayat Fund Account, Indian Bank, Pernambut, Account No.5921232[illegible] IDIB000P147" என்ற வங்கி கணக்கில் வங்கி வரைவாக செலுத்த வேண்டும். மேலும், கட்டு[illegible] மொத்த திட்ட மதிப்பீட்டில் 1% ரூ.24,02,780/-ஐ தொழிலாளர் நல நிதி பங்கு தொகையினை Manual Workers General Welfare Fund, Union Bank of India, Chennai. Account No.530601010038239, IFS Code No.UBIN0553069"-என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தியும் மற்றும் நிலத்தினை தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) என்ற பெயருக்கு தான பத்திரம் பதிவு செய்தும், அதன் நகலினை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)(பொ)
ஊராட்சி ஒன்றியம், பேர்ணாம்பட்டு.

பெறுநர்

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்ற வாரியம்,
வேலூர் கோட்டம், காட்பாடி வட்டம்,
வேலூர் - 632 006.

நகல்: ஊராட்சி செயலர்,
பத்தலபல்லி ஊராட்சி.
பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்.

MW. Construction of 304 Slum tenements at Bathalapal village in Pernambut Taluk. Vellore Dt.

Recorded M. Book page No. 9 / M 1672

[signature] 28/7/2020
JE.

[signature] 28-07-2020

SUPERINTENDING ENGINEER
Chennai-Circle-I
Tamil Nadu Slum Clearance Board
5, Kamarajar Salai, Chennai-600 005

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools



### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate